கோவையில் நடக்கும் எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் அங்கேயே நடத்த வேண்டுமென்று அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த விளையாட்டு அரங்கம் கோவை மாவட்ட விளையாட்டுக் குழுவின் தலைவரின் கீழே இருக்கும். எல்லோரும் பயன்படுத்திக்கொள்கிற அளவுக்கு இந்த விளையாட்டு அரங்கம் அமையக்கூடும். அதற்கு உதவித் தொகையாக மாநில அரசாங்கத்திலிருந்து பங்கு ரூ 1 லட்சம். கோவை மாநகராட்சியின் பங்கு ரூ. 5 லட்சம் மற்ற துறைகளில் இருந்து வந்த விவரங்கள் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பு.

*497 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்காக திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) : மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கு பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்காக மீனளத் துறை இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்குரிய திட்டத்தின் அடிப்படை நோக்கமென்ன ? அந்த ஏரியில் தண்ணீர் வற்றி விடுவதாக சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியானால் இந்தத் திட்டம் கைவிடப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தப் பகுதி கயவாய் பகுதி (Estuary). இந்தப் பகுதியில்தான் நிறைய எரால் குஞ்சுகளை வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலமாக அறிந்தோம். இந்த இடத்தில் எரால் மீன் மட்டுமல்லாமல், மடவை மீன் இனங்களையும் வளர்க்கலாம் என்று அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த பழவேற்காடு ஏரி வட செங்கற்பட்டு மாவட்டத்தின் பெருவாரியான பகுதிகளுக்குப் பயன் தரும் வகையில் கடலோர கழிமுகப் பகுதிகளில் விரிந்து கிடக்கிறது. இது பல குப்பங்களில் வசிக்கும் மீனவர் வாழ்க்கைக்கு ஆதாரமுள்ள பகுதியாகும். ஆந்திர எல்லை வரையில் இது விரிந்து கிடக்கிறது. சமீபத்திலே பெரிய சிக்கல் ஏற்பட்டு மீன்கள் போதிய அளவுக்குக் கிடைக்காமல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏரியைச் சீரமைத்து, அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரத்தைத் தரும் ஒரு நல்ல திட்டத்தை இயக்குநர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநர் அவர்கள் அனுப்பியுள்ள பரிந்துரையை ஏற்று, அரசாங்கம் பரிசீலனை செய்து அதை நிறைவேற்ற முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 19]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இதிலே 3-ல் இரண்டு பங்கு ஆந்திர மாநிலத்தில் இருக்கிறது. ஒரு பங்கு செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காட்டில் இருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டம் செயல்படுவது என்பது அந்த ஏரியில் இல்லை. அந்த ஏரியிலிருந்து தண்ணீர் கடலில் போய் விழுகிற கயவாய்ப் பகுதியில்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் தான் எரால் குஞ்சுகளை செயற்கை முறையில் வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் அறிவித்து இருக்கிறார்கள். இந்த இடத்தில் மடவை மீன்களையும் வளர்க்கலாம் என்றும் கூறுகிறார்கள். ஆகவே, மடவை, எரால் மீன்களை அங்கே வளர்த்து, நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்தோடு மத்திய அரசாங்கமும் இதற்கு ஒப்புதல் தந்து இருக்கிறது. ஆந்திர அரசோடு சேர்ந்து ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

ஆரம்பாக்கத்தில் பனிக்கட்டி தொழிற்சாலை

*498 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கத்தில் மீன் குளிர் பதன நிலையம் (Ice Plant) நிறுவுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

(இ) இவ்வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 1971, ஆகஸ்டில் செங்கற்பட்டு மாவட்டம் ஆரம்பாக்கத்தில் ஒரு டன் கொள்ளளவு கொண்ட குளிர் சேமிப்புச் சாதனத்துடன் கூடிய இரண்டு டன் பனிக்கட்டி தயாரிப்புச் சாலை ஒன்றை நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பனிக்கட்டி தயாரிப்புக்கான இயந்திரங்களை வழங்கி நிறுவுவதற்குரிய ஒப்பந்தப் புள்ளி களை ஏற்பது, கட்டிடங்கள் கட்டுதல், துணைக்கிணறு தோண்டுதல் ஆகியவை தொடர்பான வரைப்படங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒப்புதல் வழங்குதல் ஆகியவை அரசின் தீவிர ஆய்விலுள்ளன.

(இ) இச்சாதனம் இயன்ற விரைவில் நிறுவப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: இதுவும் ஆந்திர எல்லையில் இருந்து ஏறக்குறைய 4 மைல் தூரத்தில் தான் இருக்கிறது. அங்கே பிடிக்கப் படுகின்ற மீன்கள் எல்லாம் குளிர் சேமிப்பு சாதனம் இல்லாததால் கெட்டுப்போய் விடுகின்றன. இதனால் மீனவர்கள் பெரிதும் சிரமப் படுகிறார்கள். இந்தத் திட்டம் 1971-ம் ஆண்டிலேயே துவங்கப்பட்ட திட்டம். ஆகவே, விரைவிலே இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?